என் குருநாதர் பிரம்மஶ்ரீ நித்தியானந்தம் சுவாமிகளுக்காக தினம் ஒரு பாமாலை - பிரம்மஶ்ரீ தியாகு (மகன்)





தினம் ஒரு பாமாலை என் குரு நாதனுக்காக

பிரம்மஸ்ரீ தியாகு

பூமியில் நீயோர் புகழுடை தெய்வமென்று வாழவே வானத்து வள்ளல் உனை வாழ்த்தி அனுப்பி வைக்க..

மண்ணுலக மக்களின் மன மாய திரை தனையே அழித்திடவே.. எண்ணுதற்கு எட்டா மறை ஞான பொருளை எல்லாம் இருப்பவரும் இல்லாதவரும் நின் சொல் வெறுப்பதற்கு வழியின்றி நடுநெறி நின்றுரைத்த தூமணியே!! நாயகரே சத்குருவே நித்தியானந்தரே நின் மலர் பாதம் சரணம்! சரணம்!சரணம்!!



தினம் ஒரு பாமாலை என் குருநாதனுக்காக

பிரம்மஸ்ரீ தியாகு

கல்லும் கனிந்து மணலாய் மாற காலம் வரும் மனமே! எதற்கும் காலம் வரும் மனமே!!

கல்லாய் போன மனிதருக்கு எல்லாம் தெய்வம் சிலையாகும் மனமே! தெய்வம் கல்லாகும் மனமே!!

உன் உள்ளம் கனிந்து கண்ணீர் சொரிந்தால் கல்லும் தெய்வமடா மனமே! சிலையும் தெய்வமடா மனமே!!

நானென்று சொல்லி வாழ்ந்தவர் எல்லாம் நமன் வரின் என் செய்வார் மனமே! நாளை என் செய்வார் மனமே!!

ஓடிடும் நீர் போல் ஓடிடும் காலம் உயர்ந்தவர் யார் மனமே! சற்குருநாதராம் பிரம்மஸ்ரீ நித்தியானந்தரை நீ பிடி மனமே!!!



தினம் ஒரு பாமாலை என் சத்குருநாதனுக்காக

பிரம்மஸ்ரீ தியாகு

விதையானது எல்லாம் பயிர் ஆகுமோ? பூவானதெல்லாம் காயாகுமோ? காயானதெல்லாம் கனியாகுமோ? வேர் ஆகி வேருக்கும் நீராகி விதைக்கின்ற தலைவா!! என் தலைவா!!

மான் மழு ஏந்துகின்ற மன்னவனின் வான் புகழை யார் அறிவார் இங்கு அண்ணலே!! ஊனாகி உலவுகின்ற அம்மன்னவனும் நீ என்று நின் தாளினை சரணடைந்த கடலளவு சீடர்கள் கூட்டத்தை காப்பாய்!!

சத்குரு பிரம்மஸ்ரீ நித்யானந்தர் மலரடி சரணம்! சரணம்! சரணம்!!



தினம் ஒரு பாமாலை என் குருநாதனுக்காக

பிரம்மஸ்ரீ தியாகு

இருள் எனும் இத்திரை விலகியோர் கதிர் வந்து சேர்ந்த பின் நித்திரை கொள்வதேன் மனமே..

சத்திரம் போலவே கிடைத்திட்ட உடலிதனை பத்திரம் எழுதி தருவதும் யார் மனமே..

உத்திரம் போலவே உள்ளிருந்து தாங்கிடும் உத்தமனை நீ அறிவாயோ மனமே..

துறவியைப் போலவே உடல் துறக்கின்ற உயிரினை துறவாமல் பற்றிக்கொள் நீ மனமே..

சத்குரு பிரம்மஸ்ரீ நித்தியானந்த சுவாமிகள் மலரடி சரணம்! சரணம்! சரணம்!!



தினம் ஒரு பாமாலை என் குரு நாதனுக்காக
பிரம்மஸ்ரீ தியாகு

கடையவரும் கடைத்தேற்றம்
அடையவே காலமெல்லாம் தொண்டு
செய்து பழுத்த பழமல்லவோ!!
நின் வெண்தாடி சிரிப்புக்குள்
வெள்ளமென வருகின்ற நின் உள்ளத்து
சிந்தனைகள் கள்ளமிலா நெஞ்சினர்க்கு
கலங்கரை விளக்கமன்றோ!!
உடையவர் என்றே நின் தாள் பணிந்தோம் இனி
தடை என்ன வரும் தகர்த்திடும் வலிமையை
தந்திடுவாய் வள்ளலே நின்தாள் பணிகின்றோம்
வாழ்த்தி அருளிடவாராயோ!!



சத்குரு பிரம்மஸ்ரீ
நித்தியானந்தாய நமஹ!!





தினம் ஒரு பாமாலை என் குருநாதனுக்காக
பிரம்மஸ்ரீ தியாகு

பெரிதினும் பெரிது கேள் யாரிடம் கேட்பாய்
மனமே.. பெரிதினும் பெரியோன் யார்
என்று அறிவாய் மனமே!!
குணமது கோயிலென்று குருபரன்
வீற்றிருக்கும் மனம் அது செம்மையானால்
வினை தீர்க்கும் இருதலைக்கொல்லி மந்திரம்
உருவாகும் மூலத்தே நீ பிடிப்பாய் மனமே!!
மூலமது இரண்டுண்டு மனமே அனல் வீசும்
மண்டலமும் அருள்தாரை மண்டலமும் பொருளாக
பற்றி கொண்டால் பூமியிலே பிறப்பில்லை நீ
அறிவாய் மனமே!!
அருளானவன் பாதம் பிடித்தால் அம்மையப்பன்
அருள் செய்வான் நீ அறிவாய் மனமே!!



தினம் ஒரு பாமாலை என் குருநாதனுக்காக
பிரம்மஸ்ரீ தியாகு

கற்பூரத்து வாசனை தனை கற்சிலை
தான் அறிவதுண்டோ?
பொற்போதம் தாங்கி வரும்
பூவாணர் கமலபாதம் தற்போதம்
தனை விட்டே சரணடைவோம்
எந்நாளும்!!
கடலிலே போட்டவனை குளத்திலே
தேடுகின்ற குவலயத்தோர்
வாழுகின்ற பூமியடி..
சாத்திரம் பேசிடும் சாயா மனிதர்கள்
வார்த்தை உதவாதடி என்றும் அவர்
சொல் கேளாதடி..
கோத்திரம் அறிந்து கூடிக் கலந்தவர் தன்
பாத்திரம் அறிவாரடி பின் என்றும்
பிரியாரடி!!
சத்குரு பிரம்மஸ்ரீ நித்தியானந்த சுவாமிகள்
மலரடி சரணம்! சரணம்! சரணம்!



தினம் ஒரு பாமாலை என் குருநாதனுக்காக
பிரம்மஸ்ரீ தியாகு

குரு செத்தால் மோட்சம் கூற்றின் சூட்சுமத்தின்
பொருளறியா குருடர்களாய் பூமியிலே ஆயிரம் பேர்!?
ஊரென்றும் பேரென்றும் இல்லாத பெருமானவன்
கருவாகி உருவாகி திருவாகி நின்ற கோலம் நின்
திருக்கோலமே!!
ஆடை மாற்றும் மாந்தர் போல
தினம் ஓர் கொள்கை மாற்றும்
குணமடையோர் குலத்திடை
சேராமல் குணக்குன்றே
காத்தருள்வாய்!!
சத்குரு பிரம்மஸ்ரீ நித்தியானந்த சுவாமிகள்
மலர் பாதம் சரணம்! சரணம்! சரணம்!!




தினம் ஒரு
பாமாலை என்
குருநாதனுக்காக

பிரம்மஸ்ரீ
தியாகு

இரு வினை அழிக்கும் நின்
இரு தாள் பிடித்தேன்
விடமாட்டேன் எவர்வரினும்
கலங்க மாட்டேன் மாதவமே
நின் மேனி என்றும்
மறக்கிலேன் ஐய நின் நாமம்
உரைக்கிறேன்!!

நீயே துணை என்று நான் நிற்க்கும்
வேளையிலே கானல் நீரான
கற்பனை வாழ்க்கை தனை மாற்றி
மோன முழு நிலவாய் சித்தம்
சிவந்திட என் சிந்தையில் நின்று
விடவா!!

ஓம் சத்குரு பிரம்மஸ்ரீ
நித்தியானந்தாய நமஹ



தினம் ஒரு
பாமாலை என்
குருநாதனுக்காக

பிரம்மஸ்ரீ
தியாகு

காலத்தின் தேவையை கருத்தில்
கொள்ளாதோர் மூலத்தை அறியாரடி!
மனப்பூட்டை திறக்க மார்க்கம்
அறியாதோர் மன்னனை மறந்தாரடி!
தான் மட்டும் தான் என்று வாழ்வோர்கள்
என்றும் தரணியில் நிலையாரடி!
தலைவனை அறிந்து தாள்பற்றிக்
கொண்டோரே தன்னை அறிந்தோரடி!
மாறும் உலகினில் மாற்றத்தை
தருபவன் கோன் எனும்
குருநாதனடி!
அவன் கோலத்தையறிந்து
கும்பிட்டு தொழுதால் முக்தி
கிடைக்குமடி!



தினம் ஒரு
பாமாலை
என் குரு
நாதனுக்காக

பிரம்மஸ்ரீ தியாகு

மேலாம் பதங்கள் எல்லாம் மேவிய
ஞான குருபரன் நாலாம் பதம் கண்ட
ஞானத்தை ஆரறிவார் அண்ணலே!!
கூரான வேல் கொண்டு குமரனவன் வீற்றிருக்கும்
தோகை மயிலுடனே குயில் கூவும் விந்தையது..
சந்தைதனில் கிடைத்திடுமோ? தரணியிலே
தருவாருண்டோ?
மனத்துள்ளே இருக்கும் மாய
இருளை மாய்த்திடவே நீ
பிறந்தாய்!!
மண்ணுள்ளே இருக்கும்
மட்டும் மாமணியை
போற்றிடுவோம்!!



சத்குரு பிரம்மஸ்ரீ
நித்தியானந்தரடி போற்றி!!



தினம் ஒரு
பாமாலை என்
குருநாதனுக்காக

பிரம்மஸ்ரீ
தியாகு

கல்லாதன பல கற்றும் கடவுள்
(குரு)நெறிமேவும் கல்விதனை
கல்லாதவர் கற்றவர் ஆவாரோடி!!
பொல்லாதனயெல்லாம் ஊர் கூடி
வலம் வருகையிலே நில்லாமை
எனும் உலகத்தின் நியதி தனை
காணாரடி!!
நல்லென எல்லாம் நடுநெறி நின்று நாளும்
நடக்கையிலே நமை காக்க தாயாய்
தரணியிலே வந்தவரே சத்குருவே பிரம்மஸ்ரீ
நித்தியானந்தரே போற்றி! போற்றி!


தினம் ஒரு
பாமாலை என்
குருநாதனுக்காக
பிரம்மஸ்ரீ தியாகு
வினை பல செய்தே வீணரெல்லாம்
நதிப்பல மூழ்கி தன் பாவம் தீர்க்கும்
தரணியிலே!!
நீ விதைத்த முட்செடியை நீ தின்னும்
காலம் வரும் மாறாது இந்த விதி
மாநிலத்தில் கண்டதுண்டோ??
தேறாது தெளியாது சிந்தையது புரியாது
மதி இல்லா மூடர்தனை மாறாத
மனத்துடனே நாடாதே நடுங்காதே நமன்
வரினும் அஞ்சாதே!
ஓம் சத்குரு
பிரம்மஸ்ரீ
நித்தியானந்தாய
நமஹ!!


தினம் ஒரு
பாமாலை என்
குருநாதனுக்காக
பிரம்மஸ்ரீ
தியாகு
சொல்லற்கு அரிய சுத்த சிவ
சாந்த அத்தன் என வந்த
அம்மையே அப்பா!!!
புத்தியில் புகுந்து விட்ட பூவுலக
வாசனைகள் எத்திக்கு சென்றாலும்
ஏதவத்தை பட்டாலும் விட்டுவிட
கூடுமோ? விமலா நின் பாதம் தொட்டு
விட கூடுமோ?
சட்டியில் இருக்கின்ற சரக்கினை எடுத்து ஓர்
சித்திரம் தீட்டுகின்ற திறமதனை தந்திடுவாய்
வெட்டுண்ட மரம் போலே உயிர் விட்ட உடன்
விழுகின்ற உடல்தனையே கட்டுண்டு நிற்காமல்
காத்திடுவாய் அம்மையே அப்பா!!
ஓம் சத்குரு பிரம்மஸ்ரீ நித்தியானந்த சுவாமிகள்
மலரடி சரணம்!!


தினம் ஒரு பாமாலை
என் குரு நாதனுக்காக
பிரம்மஸ்ரீ தியாகு
பல்லுயிர் வாழவே பாரினில்
பெய்த மழையில் ஓர் துளி
உயிராகி உலகெல்லாம் குளிரவே
வந்திட்ட செல்வமே! தேனே!
திரவியமே! வானோர் தொழும்
தெய்வமே! நீர் கொண்ட
மேகமென நின்றாடும்
நினைவுகளில் வண்டாடும்
சோலையில் வளைகின்ற கொடி
மலர் வாசமே!!
சத்குரு பிரம்மஸ்ரீ நித்தியானந்தரே
போற்றி! போற்றி! போற்றி!


தினம் ஒரு
பாமாலை என்
குருநாதனுக்காக
பிரம்மஸ்ரீ தியாகு
காதற்ற ஊசி கதைக்கின்ற கதை என்னடி??
காற்றில்லா பட்டம் படிக்கின்ற பாடமென்னடி??
துடிக்கின்ற இதயம் சொல்கின்ற வேதம் என்னடி??
கருவறையில் ஒன்றும்
காலடியில் ஒன்றும் உரைக்கின்ற
பொருள் என்னடி??
தினம் படிக்கின்ற பாடத்தில்
உதிக்கின்ற சிந்தனைகள்
உன்னை செதுக்கிடும்
உளியாகுமே!!
சத்குரு பிரம்மஸ்ரீ நித்தியானந்தரடி
போற்றி போற்றி போற்றி



தினம் ஒரு
பாமாலை என்
குருநாதனுக்காக
பிரம்மஸ்ரீ தியாகு



மனமெல்லாம் வீசுகின்ற
வனவாச சிந்தனைகள்..
பற்றியதெல்லாம் விட்டுவிடு பாதை
தெரியுமென்றான்
பாதையதை மறைப்பது பற்றுகளே
என்றது குரல்..
சக்கரத்தின் வட்டமென சுற்றி சுற்றி
வராமல் சற்றே விலகி இரு
சந்தனமாய் நீ மணப்பாய்!!
உள்ளூற ஊறுகின்ற ஊரணி போல
உள்ளத்தில் எழுகின்ற எண்ணங்கள்
ஆயிரம் அத்தனையும் விட்டுவிட்டு
அப்பனே உன்னை பிடிக்க
ஆசையது துளிர்க்கிறது
சத்குரு பிரம்மஸ்ரீ நித்தியானந்தாய நமஹ!!

தினம் ஒரு
பாமாலை என்
குருநாதனுக்காக
பிரம்மஸ்ரீ
தியாகு





இல்லை எனும் ஓர் இல்லம் அமைந்தபின்
இல்லாள் என் செய்வாளடி.
அதை எடுத்து சொல்லலாகாதடி..
இம்மையில் நரகனவே இங்கு
படைத்தவனை இறைவன் என்று
சொல்லலாகாதடி!
பொருள் இல்லா வாழ்க்கையும் அருள் இல்லா
மறுமையும் அன்னை இல்லாபிள்ளை
போலாகுமடி!
தினம் தினம் அலை வாயில் துரும்பாகுமடி!
தொல்லைப் பிறவியை தொட்டு அழித்திட
வல்லமை உள்ளவரடி!
நம் சற்குரு பிரம்மஸ்ரீ நித்தியானந்தரடி!
அவர் பாதம் பணிவோமாடி!



தினம் ஒரு
பாமாலை என்
குருநாதனுக்காக
பிரம்மஸ்ரீ
தியாகு



விதைக்கின்ற விதை எல்லாம்
முளைத்திடுமோ?
யாரும் விதைக்காமல்
முளைக்கின்ற பனையுமுண்டு!
களையுமுண்டு!
விழுகின்ற நீரினில் விதைக்கின்ற
சக்தி உண்டு!
எழுகின்ற நெருப்பினுள் அழிக்கின்ற
சக்தி உண்டு!
விழுவதிலே சிறுமை இல்லை?
எழுவதிலே பெருமை இல்லை?
உன்னாலே வாழ்ந்தவர்கள் வையத்துள்
பலருண்டென்று வாழ்ந்தாலே நாம் வாழும்
வாழ்க்கைக்கு பொருளுண்டு!!
சத்குருநாதர் பிரம்மஸ்ரீ நித்தியானந்த
சுவாமிகள் மலர் பாதம் பணிவோம்!!



தினம் ஒரு
பாமாலை என்
குருநாதனுக்காக
அடியேன்
பிரம்மஸ்ரீ தியாகு



நிலையில்லா மனத்தின்
நெடுவேதனை எல்லாம்
நிலைகெடல் வேண்டும் ஐயா
நின்னை என்றும் மறவாத
நெஞ்சினர்க்கே!!
அறிவற்று அறியாமையற்று
ஆழ்ந்த அனுபவமற்று
பிரிவற்று பிரியாதிருந்தால்
பிறப்பற்று வாழலாம்
பெருமான் சத்குரு பிரம்மஸ்ரீ
நித்தியானந்தர் பாத கமலமே!!




செரிவான அறிவு கொண்டு சேர்ந்தின்பம்
பெறுவதற்கே முடிவான முனிவனென
வந்தார்!
முக்காலமும் அறிந்து எக்காலமும்
பொருந்தும் எண்ணிலா தத்துவங்கள்
சொன்னார்!
நித்தியமும் ஆனந்தம் நிலைபெற்று
வாழவே நித்தியானந்தராய் வந்த
தெய்வமே போற்றி!! போற்றி!!




முற்றுப்பெறாத
உயிருக்கெல்லாம் வித்தை தந்து
முன்னவனாய் முதல்வனாய்
பின்னை வரும்
பிறவிக்கெல்லாம் தலைவனாய்
இருப்பவரே நித்தியானந்தரே
பற்றி தொடரும் இருவினையும்
பகலவன் கண்ட பனிபோல் மறைய
கருவில் வளரும் உயிர் போல
நின்னை என்றும் கருத்தில் வைத்து
வாழ்கின்றோம்!!
உருவில் மறைந்து அன்பரெல்லாம் உய்யவே
தினமும் அருவில் வந்து அணைக்கின்ற தாயே
நித்தியானந்தரே போற்றி!!




அலையில்லா கடலும் உண்டோ?
ஆசையில்லா மனமும் உண்டோ?
பாசமில்லா இதயம் உண்டோ?
விலை இல்லா பொருளும் உண்டோ?
பசியில்லா உயிர்கள் உண்டோ?
நீரில்லா மேகம் உண்டோ?
உரைப்பில்லா நெருப்பு முண்டோ?
ஒளியில்லா விளக்கும் உண்டோ?
வீரமில்லா சொல்லும் உண்டோ?
தானென்று இல்லாத தனி ஞானம்
கொண்ட மகான் தரணியிலே
யாரடியோ!!
நம் சத்குருநாதரான
நித்தியானந்தரடியோ!!




பொன்னையும் மணியையும் போதும் என்று
சொன்னவர் பூதலத்தில் ஒருவர் உண்டோ?
நின்னையும் அவனையும் ஒன்றென அறிந்த
பின்னே இல்லை என்று சொல்வாரும்
இச்செகத்தில் ஒருவர் உண்டோ?
கண்ணிலே ஒளி இருந்தும் மறைக்கின்ற காரிருளை
உன்னிலிருந்து ஆட்டுகின்ற ஒருவனவன் அருள்
என்னும் ஒளியன்றி காணுமோ கண்!!
உரையற்று உணர்வற்று உள்ளிருக்கும் இருளை
எல்லாம் செறிக்கின்ற குருநாதன் அவன் சொல் கேட்டு
இருக்கையிலே கல்லிருக்கும் தேரை போல் காணலாம்
இறையையே!!!
சத்குரு பிரம்மஸ்ரீ நித்தியானந்தரடி போற்றி!
போற்றி! போற்றி!



தினம் ஒரு
பாமாலை என்
குருநாதனுக்காக
அடியேன்
பிரம்மஸ்ரீ தியாகு

எள்ளி நகையாடி எம படர் வரும் நேரம்
துள்ளி வரும் காளை என நீ
செய்த தர்மம் வரும் மனமே!!
பிள்ளை தனை காண
வரும் பெற்றவளை போல
கள்ள மனம் தெளிந்து
நீ காத்திருப்பாய் மனமே!!
ஊர் கூடி அழுவதெல்லாம் உலகிற்கு
சொல்வதென்ன? உனக்கும் ஒரு நாள்
வரும் உண்மை தனை மறவாதே நீ
மனமே!!
கருத்தினில் உள்ளதெல்லாம் கழுவி வைத்த
பாத்திரம் போல் நினைவு ஏதுமின்றி நின்று
விடு நீ மனமே!!
சத்குரு பிரம்மஸ்ரீ நித்தியானந்தரடி நீ
பணி மனமே!!



தினம் ஒரு
பாமாலை என்
குருநாதனுக்காக
பிரம்மஸ்ரீதியாகு

பொய்யுரைத்தல் போதமென்று.. தொடங்கும்
சிவவாக்கியனின் சிந்தனையை தனதாக்கி
எழுதும் சிறு கவிதை

உடையவர் என்று சொல்ல ஒருவர் இல்லா
ஊரிலே கடையவர் தன்னையே கண்டு
ரசிக்கின்றார்!!!
உடையவர் தன்னை மடையவர்
என்று சொல்லும் மதி இல்லா
ஞானிகாள்!!?
உடையவரின் பொருள் என்ன
ஏதொன்றும் இல்லாது இருப்பதுவே!!
கடையவரும் மடையவரும் தான்
என்று இருக்கையிலே உடையவர்
எல்லாம் ஒதுங்கித்தான் வாழ்வரே!!!!
சத்குரு பிரம்மஸ்ரீ நித்தியானந்தரடி போற்றி!!

தினம் ஒரு
பாமாலை என்
குருநாதனுக்காக
அடியேன்
பிரம்மஸ்ரீ தியாகு



கொன்றை மலர் சூடி நின்ற
கூத்தனவன் வடிவம் தன்னில்
குருவெனவே நின்னை நானும்
கண்டேனடி!!
இருக்கின்ற வாழ்க்கை தினம்
கொடுக்கின்ற பாடம்
என்னென்று சொல்வதடி!!
திருத்தி வளர்த்ததொரு தேமாஞ்செடியே
பூத்துக்குலுங்குமடி கனி தேனாய்
இனிக்குமடி!!
நீதிக்கு நாயகன் நம்மூர் தலை
மகன் சொல்லுக்கு மாற்றுமுன்டோ!
அவர் சொல்லாதது ஏதுமுண்டோ!!
சத்குரு நாதனாய் வந்த இறைவனின் பாதம்
பணிவோமடி!! குரு நித்யானந்தரடி!!

தினம் ஒரு
பாமாலை என்
குரு
நாதனுக்காக
பிரம்மஸ்ரீ தியாகு



பேசாதன பல பேசி
பெருமாயை எனும் பேய்
எல்லாம் ஓடவே அம்பலத்தே
ஆடும் ஒருவன் ஆசானென
வந்த அருமையை
ஆராரிவார் அன்னலே!!
நேசா நிமலா நிர்மல வாசா
அயன்மால் அறியா விமலா
பேசா அனுபூதி தந்து மல
வாசம் அறுத்த பெருமானே
சத்குரு பிரம்மஸ்ரீ
நித்தியானந்த தேவா
பணிந்தோம் நின் மலர்
பாதம்!!





தினம் ஒரு
பாமாலை என்
குரு நாதனுக்காக
அடியேன்
பிரம்மஸ்ரீ தியாகு

ஐந்தொழில் புரிகின்ற
அம்பலவாணனோ? அவனுக்கும்
குருவான ஆறுமுக வேலனோ?
துறவென்ற சொல்லுக்கு உருவமாய்
நின்ற பட்டினத்து செட்டியோ?
கண்டதொரு காட்சியில் கண் தோண்டி
வைத்த கண்ணப்ப நாயனோ?
பாசத்தை அறுக்கவே பிள்ளை கறி
கேட்டவனின் நேயத்தில் வந்தவனோ?
மூவாயிரம் ஆண்டிருந்து பாவாயிரம்
பாடிய மூலனவன் உருவாய்
வந்தவனோ?
எப்பாடு பட்டாலும் முக்தி பெற போராடும்
சத்தியத்தில் நீ வாழ்ந்திடு மனமே!
சத்குரு நாதனாம் நித்தியானந்தரடி நீ
பணி மனமே!!



தினம் ஒரு
பாமாலை என்
குரு நாதனுக்காக
அடியேன்
பிரம்மஸ்ரீ தியாகு

பார் முதல் ஐந்தும் படைத்த பரமனின்
கோல வடிவமடி- சத்குருநாதரவராமடி!
எறும்புக்கும் யானைக்கும் உணவு சமைத்தவன்
உன்னை விடுவானோடி-சத்குரு நாதரவராமடி!
தன்னை அறிய துடிக்கும் உயிர்க்கெல்லாம்
தலைவன் அவராமடி-சத்குருநாதரவராமடி!
முன்னை வினையின் முடிச்சை அவிழ்க்கும்
மூலம் அறிந்தார் யாரடி-சத்குரு நாதனவராமடி!
பேரறியாத பெரும்பொருள்
தன்னின் ஊரறிவாரடி அந்த
உத்தமன் பேர் என்னடி?



சத்குரு நாதனாய் வீற்றிருக்கும்
குரு நித்தியானந்தரடி!! அவர்
பாதம் பணிவோமடி!!





தினம் ஒரு
பாமாலை என்
குருநாதனுக்காக
அடியேன்
பிரம்மஸ்ரீ தியாகு

எள்ளுக்குள் எண்ணை போல் எங்கும் நிறைந்தானை!
கல்லுக்குள் ஒளி போல காணக் கிடைக்காதவனை!
பாலுள் நெய் போல் படர்ந்து கிடந்தானை!
கண்ணுள் மணியாய் கலந்தெங்கும் நின்றானை!
பூவின் மணமாய் போதமாய் கலந்தவனை!
தேனில் சுவையாய் தெளிந்தார்க்கு சிவனாய்!
அண்டமெல்லாம் போர்க்கும் அருணனின் வடிவாய்!
சொல்லுள் அடங்கா பொன்னம்பலத்து சுடராய்
வேதங்கள் முழங்கிடும் வேதியனாய் ஆரியனாய்
ஐயனாய் சத்குரு நாதனாய்
நித்தியானந்தராய் வந்த குருபரன் தாள்
வாழ்க; வாழ்க! வாழக!!!



தினம் ஒரு
பாமாலை என்
குரு நாதனுக்காக
அடியேன்
பிரம்மஸ்ரீ தியாகு

காலமகன் தந்த கருணை மழை
மேகம் நீ!! ஞான தாகம் கொண்ட
உயிருக்கெல்லாம் அமிர்த மழை
பொழிபவன் நீ!!
பின்னை ஒரு தெய்வத்தை பேண
நினையாத தன்னறிவு
கொண்டவர்க்கு தாயுமானவனாய்
தற்பறனாய் ஆனவன் நீ
தேடுகின்ற பொருளறிந்து தேடுவோர்
உள்ளத்தில் தெளிந்து நின்ற வான் பொருள் நீ!!
கோடி மலர் வாசம் கொண்டு சூடுகின்ற மாலை
என ஆனவன் நீ!!

கொன்றை மலர் சூடி நின்ற
கூத்தனவன் வடிவம் தன்னில்
குருவெனவே நின்னை நானும்
கண்டேனடி!!
இருக்கின்ற வாழ்க்கை தினம்
கொடுக்கின்ற பாடம் என்னென்று
சொல்வதடி!! சோதனையாகவே
வந்ததெல்லாம் உன்னை என்றும்
சாதிக்க தூண்டுமடி!!
நீதிக்கு நாயகன் நம்மூர் தலை மகன்
சொல்லுக்கு மாற்றுமுண்டோ? அவர்
சொல்லாதது ஏதுமுண்டோ!!
கூப்பிட்டும் வாராத கோமகன்
எங்கள் குருநாதனாய்
வந்தாரடி! நித்யானந்தரடி!!



சிரத்தை மழித்தாலும்
சடையை
வளர்த்தாலும்
சரத்தினை பாராரடி
தன் பாவம் தீராரடி?
நன்றியினை
கொன்றவரை நமன்
கூட வெறுப்பானடி
அந்த நாயகன்
சிரிப்பானடி
காட்டிலே கிடந்தாலும் கடல் மலை
திரிந்தாலும் மூச்சை அடக்கியே
முந்நூறு நாளிருந்தாலும் கூற்றுவன்
எனும் ஓர் கோமகன் வருவானடி!
அவன் கோலத்தை அறியாரடி
ஞாலத்தை சுற்றியே நாள்தோறும்
நடந்தாலும் காலத்தே எழுந்து நீர்
காலிலே கனல் ஏற்றாமல் சோதியை
காணாரடி அவன் சோதனை தீராதடி?
சத்குரு பிரம்மஸ்ரீ
நித்தியானந்தரடி போற்றி!!



கதிரவன் ஒளியையும்
கருகொண்ட
மேகத்தின் கருணை
மழையையும்
தடுப்பதும் யார் மனமே?
ஊனான காயத்துள்
உயிராக உலவுகின்ற
உறுபொருள் நீ தேடு
மனமே?
வித்தை கல்லாத ஒருவன் வில்லேந்தி
நின்றாலும் நெடும் போரிலே
வெல்வானோ நீ சொல் மனமே?
விடியாத இரவென்றும் முடியாத
பகலென்றும் முன்னவன்
படைக்கவில்லை நீ கேள் மனமே?
காணாத கடவுளைக் காட்டிடும்
ஐயனவன் பாதம் அரண்
பாதம் என்றே பணி மனமே
சத்குரு பிரம்மஸ்ரீ நித்தியானந்த
சுவாமிகள் மலரடி சரணம்! சரணம்!



இல்லாத இடம்
தேடி வருவான்
(இறைவன்)
கண்ணதாசனின்
கவிதை வரிகள்..
உண்மையில் எது இல்லாத
இடம் தேடி வருவான்?
(சிந்திக்க சில நொடிகள்)
பொன் இல்லாதோர் பூமியிலே
கோடியுண்டு..
மண் இல்லாதோர்
மண்ணிலே கோடியுண்டு..
பெண் இல்லாதோர்
பாரினிலே கோடியுண்டு..
கல்வி இல்லாதோர்
காசியினியில் கோடியுண்டு..
இதுவெல்லாம் இகமதிலே உள்ளவர்கள்
சொல்லுகின்ற இல்லாமை
மண்ணல்ல பொன்னல்ல பெண்ணல்ல
கல்வியல்ல இறைவன் தேடுவதோ இந்த
இல்லாமையல்ல?



தான் என்ற இருள்
நீங்கி தலைவன் தாள்
சேர்வதும் எப்போ?
பேயான
மனமொடுங்கி
பேரொளியை
காண்பதும் எப்போ?
சேயாக நான் மாறி தாய்
அமிர்தம் சுவைக்கின்ற
நாளும் எப்போ?
மாறாத நின் தெய்வ வடிவும் நகையும்
நான் காண்பதும் எப்போ?
தேராத இச்சையெல்லாம்
செத்தொழியும் நாள் வருவதும்
எப்போ?
சித்தனவன் சிந்திய சத்தான
வித்தினில் முளைத்தவன் நீ என
கவி பாடி மகிழ்ந்திடு மனமே!!!
பிரம்மஸ்ரீ நித்தியானந்தரடி போற்றி! போற்றி!



மனம் என்னும் கோட்டைக்குள்ளே
வெண்ணிலாவே!!!
மூன்று மதயானை இருப்பதென்ன
வெண்ணிலாவே
ஜென்ம ஜென்ம வாசனை எல்லாம்
வெண்ணிலாவே!!
தன் வடிவாய் கொண்ட புத்தியன்றோ
வெண்ணிலாவே!!
தான் என்ற தலமிருக்கும்
வெண்ணிலாவே!!
அது தனையழிக்கும் ஆங்காரம்
வெண்ணிலாவே!!
இருளான காட்டுக்குள்ளே
வெண்ணிலாவே!!
நிலவொளியாக காயும்
சித்தமது வெண்ணிலாவே!!
சத்குரு பிரம்மஸ்ரீ நித்தியானந்தாய நமஹா

சித்தனையே பேசுகின்ற
சித்தனல்லவோ!
என்றும் அத்தனுடன்
வாழுகின்ற அப்பன்
அல்லவோ!!



தேடுவோர்க்கு கிடைக்காத
செல்வம் நீயல்லவோ!!
சிந்தை தெளிந்தார்க்கு
என்றும் நீ தெய்வமல்லவோ!!
தேன் மனம் கண்டு பறந்து வரும் வண்டனவே!!
நின் சொல் திறம் கண்டு கூடி நின்ற
கூட்டமெல்லாம் தன் மனம் தெளிந்து வாழ்ந்திடவே
வந்திட்ட வள்ளல் ஐயா
வாட்டுகின்ற வறுமைக்கும் வாழ்வு
சொன்னவர்.. தேடுகின்ற பொருளுக்கும்
பொருளை சொன்னவர்.. இருளுடைய
வாழ்க்கைக்கும் ஒளியை தந்தவர்..
நின்னருள் வேண்டி வருவோர்க்கும் ஞானம்
தந்தவர்!!
சத்குரு பிரம்மஸ்ரீ நித்தியானந்த சுவாமிகள் மலரடி
சரணம்! சரணம்! சரணம்!



ஒளிர்கின்ற கதிரவன்
ஒளியினாலே முளைக்கின்ற
உயிர்களுக்கெல்லாம்
தாயைப் போல நினைக்கின்ற
மனங்கள் எல்லாம்
தழைத்திடவே அணைக்கின்ற
நீயும் அன்னையல்லவோ!!
எம் மண்ணில் விழுந்தாலும் நீர்
தன்மை மாறாது.. செம்மண்ணில்
விழுந்தாலோ திரும்பவும் வராது
வந்து உனையே சேர்ந்து விட்டோம்
வான் மழை போல் அருள்வாயே!!
ஞான வள்ளலே குருவே
பிரம்மஸ்ரீ நித்தியானந்தரே...



ஐம்பூதம் காக்கின்ற
கோட்டையடி
வெண்ணிலாவே அதை
அடக்கி ஆள்வதும் எப்படியோ
வெண்ணிலாவே..
ஒன்பது கால் பந்தலடி
வெண்ணிலாவே அதை ஓசை
கொண்டடைத்திடடி வெண்ணிலாவே..
புகழெனும் போதையது
வெண்ணிலாவே அது புகையாமல் சுடும்
நெருப்பாகும் வெண்ணிலாவே..
உந்நிலை அறிய வேண்டும்
வெண்ணிலாவே அது ஊர் கூடும்
முன்னமே வெண்ணிலாவே..
எண்ணிறந்த கோடி உயிர்
வெண்ணிலாவே எங்கும் நீ இருந்த
கோலம் என்ன வெண்ணிலாவே..
சத்குரு பிரம்மஸ்ரீ நித்தியானந்த சுவாமிகள்
மலரடி சரணம்! சரணம்! சரணம்!!



இல்லாத இடம்
தேடி வருவான்
(இறைவன்)
கண்ணதாசனின்
கவிதை வரிகள்..

உண்மையில் எது இல்லாத
இடம் தேடி வருவான்?
(சிந்திக்க சில நொடிகள்)

பொன் இல்லாதோர் பூமியிலே
கோடியுண்டு..
மண் இல்லாதோர்
மண்ணிலே கோடியுண்டு..
பெண் இல்லாதோர்
பாரினிலே கோடியுண்டு..
கல்வி இல்லாதோர்
காசியினியில் கோடியுண்டு..

வெளிக்குள் வெளியாய்
ஒளிக்குள் ஒளியாய்
வித்துக்குள் வித்தாய்
சத்திக்குள் சத்தனாய்
ரூபமில்லா சொரூபமே
உரு கொண்டு குருவாய்
வந்ததடி!!
வேருக்கு நீராய் வெயிலுக்கு நிழலாய்
பூவுக்குள் தேனாய் தேனுக்குள்
சுவையாய். ஊனுக்குள் உயிராய்
ஒன்றுக்குள் ஒன்றாய் கலந்தாரடி!!



சத்குரு பிரம்மஸ்ரீ
நித்தியானந்த
சுவாமிகள் மலரடி
சரணம்! சரணம்!
சரணம்!





தன்னையறியும் தளம் என்னடி வெண்ணிலாவே
தன் நிலைபேறாது நிற்குமிடம் வெண்ணிலாவே
எண்ணிலா கோடி தெய்வம் வெண்ணிலாவே
எனை ஆண்ட தெய்வம் எது வென்றறிவது எப்படி
வெண்ணிலாவே
சொன்ன குருநாதனடி வெண்ணிலாவே
பின்னை ஒரு தெய்வம் இல்லை
வெண்ணிலாவே
புலன் அடங்கா வேளையிலே வெண்ணிலாவே
நம் மனமடங்க வழி சொன்னது யார்
வெண்ணிலாவே
துன்பம் எனும் தோணியிலே வெண்ணிலாவே
உனை சூழலாமல் காப்பது யார் வெண்ணிலாவே
சொல்லிலே சுடர் வருமோ
வெண்ணிலாவே சற்குருநாதன்
தாள் பணிவாய் வெண்ணிலாவே
சத்குரு பிரம்மஸ்ரீ நித்யானந்தா சுவாமிகள்
மலரடி சரணம்! சரணம்! சரணம்!



கருத்தினில் கருவாகி உருவத்தை
மறைத்திருந்து உள்ளத்தே ஓங்குகின்ற
களங்கமற காட்சி நீ!!!
செம்பினை சேரும் களிம்பெனவே
இந்த செகத்தோடு சேராது
காத்தருள்வாய்!!
கொம்பினை தேடும் கொடி போல
குவலயம் தேடும் குருவனவே நீ
வந்தாயே!!
நீரினை பிரிந்த மீன் எனவே வேரினை
மறந்த மரம் எனவே மனிதரெல்லாம்
நெடும் போரினில் தேடும் ஊசி என்றே
போக்கிடுவார் தம் வாழ்வை??
நேசம் இல்லா நெஞ்சும் வாசம் இல்லா பூவும்
ஓசையில்லா கல்லும் வார்த்தை இல்லா
ஊமையை போல் உதவாமல் போகுமடி!
ஆர்க்கும் உதவாமல் போகுமடி!!

சத்குரு பிரம்மஸ்ரீ நித்தியானந்த சுவாமிகள்
மலரடி சரணம்! சரணம்!சரணம்!



நீரிருக்கும் ஏரியினில் எங்கிருந்தோ
பறவை வரும்!
நிலைமை கொஞ்சம் மாறும்போது
வந்ததெல்லாம் பறந்து விடும்..
ஓடும் வரை கூட்டம் வரும் ஓய்ந்து
விட்டால் யார் வருவார்?
கூடு வந்த பறவை ஒன்று தன் கூட்டை மறந்து
போகும் முன்னே..
ஏடு கொண்டு எழுதும் இறைவன் எண்ணிய
வண்ணம் வாழ்வதும் உண்டோ??
தேடுகின்ற பொருள் அறிந்து நீ சேர்ந்து
கொண்டால் ஞானம் உண்டு!!

சற்குரு பிரம்மஸ்ரீ நித்தியானந்த சுவாமிகள்
மலரடி சரணம்!

சாத்திரமும் சூத்திரமும்
கற்றாலும்
குடும்பம் பிள்ளைகளை
விட்டாலும்



கோத்திரம் ஏதும் பாராத
சற்குருநாதர் பாதம் பணிவோமடி!!
அண்ட சராசரமும் அகிலமும்
பொய்யென போகும் என்றால்
பிண்டத்தில் என்ன பெருமை உள்ளதடி??
தொண்டருக்கும் தொண்டர் என தொண்டு
செய்வோர் தனை
தண்டனிட்டு தாள் பணிவாரடி!!
என்றும் சிந்தை தெளிந்தாரடி!!
இரவு பகலென என்றும் மாறுகின்ற
நிலையில்லா பூமியடி..
மாறுகின்ற மனம் கொண்டும் நேர்வழியில்
வாழ்வதற்கு வல்லமை வேணுமடி!! என்றும்
வல்லமை வேண்டுமடி!!

சத்குரு பிரம்மஸ்ரீ நித்தியானந்தர்
மலரடி சரணம்!சரணம்!சரணம்!



பஞ்சபூத சிறைக்குள் பகலவனாய் பூத்தவரே
பாரெங்கும் தேடிடும் பகுத்தறிவு ஞானியே!!
பண்பு இல்லா பாமரருக்கும்
அன்பு செய்த அற்புதரே!!
பாடுகின்றேன் நின்னையே!
பணிகின்றேன் நின் தாளினையே!!
நெருப்பெனவே நின் மேனி! அதில்
நிழல் எனவே நின் பாதம்!!
ஆவியொடு காயம் என கலந்து நின்றவருக்கு
காட்டுகின்ற தரிசனத்தை கண்டேன்!
இரு கைகளும் ஓர் பாதம் என நின்றவர்கள்
காணுகின்ற காட்சியும் வேறு கண்டேன்!!
பாவியென வாழாமல் ஆவியென
அலையாமல் தூய நின் அடியினில் நின்றேன்!

சத்குரு பிரம்மஸ்ரீ நித்தியானந்த சுவாமிகள்
மலரடி சரணம்! சரணம் !சரணம்!



மண்ணிலே மணத்தை வைத்தான்!
நீரிலே குளிர்ச்சி வைத்தான்!
நெருப்பிலே உரைப்பு வைத்தான்!
காற்றிலே தீண்டல் வைத்தான்!
விண்ணைப்போல் கடந்து நின்றான் ஒருவன்!
என்றும் வேண்டுவோர்க்கு அருள் செய்வான் ஒருவன்!
உந்நிலை கண்டபோதும் தன்னிலை
மறந்தவர்கள் எந்நிலை பெறுவார்கள்
இறைவா?
யார் வந்து உரைப்பார்கள் இறைவா?
சற்குரு பிரம்மஶ்ரீ நித்தியானந்த
சுவாமிகள் மலரடி சரணம்



பிறப்பதிலே
பெருமையுண்டோ?
இறப்பதிலே
சிறுமையுண்டோ?
வாழ்வதிலே



ஞானம் கொண்டு நீ
வாழ்ந்திட்டாலே இன்பம்
உண்டு!!
அல்லைத் தின்னும் பகல் போல எனை
அள்ளி அணைக்க கூடாதோ!!
கள்ள மத யானையென
கண்டபடி நீ போகாதே
வெள்ளமென ஓடிவரும் குரு நாதன்
இணையடி சேர்வோமே!!
தேவர்கள் போற்றிடும் திருவேடம் பூண்ட
சத்குரு பிரம்மஶ்ரீ நித்தியானந்தர்
சுவாமிகள் மலரடி சரணம்! சரணம்! சரணம்!

அறிவு எனும் விளக்கேற்றி
வைத்து
அறியாமை இருள் ஓட
வைத்தவராம்!




துன்பக் கடலில் விழுந்தவர்க்கும்
கரை சேரும் வழியை சொன்னவராம்!
சுணங்கன் போல சுற்றி திரிந்தவர்க்கும்
சுடரொளி காட்டி விட்டவராம்!
காண்பதெல்லாம் மாறுகின்ற
கற்பனையான உலகமிது!
கொண்டவரையே கொல்லுகின்ற
கோபம் அதை விட்டுவிடு..
நதி வழி போனால் கடல் வரும்..
விதி வழி போனால் என்ன வரும்?
கெடுமதியால் என்றும் கேடு வரும்..
கண்டு தெளிந்தால் என்றும் இன்பம் வரும்!
சற்குரு பிரம்மஶ்ரீ நித்தியானந்த சுவாமிகள்
மலரடி சரணம்! சரணம்!சரணம்!



மூச்சிலே முளைத்த மனம்
காட்சியில் யார் அறிவார்?
காடெனவே வளர்த்து
விட்டால் காலமெல்லாம்
வேதனை தான்..
பொன்னை நம்பி வாழ்பவர்கள்
பூமியிலே ஆயிரம் பேர்!!
தன்னை நம்பி வாழ்பவர்கள்
தரணியிலே எத்தனை பேர்!!
உன் கணக்கு தீர்ந்த போது தன் கணக்கு
காட்டுகின்ற கருணை உள்ளம் கொண்ட
பேர்கள் கோடியே?
அடுத்த வேலை பசி வந்தால் அத்தனையும்
மறந்துவிடும்அன்பு கொண்ட உள்ளங்கள்
கோடியே..
மாண்டவரும் ஆண்டவரும் மண்ணிலே
வாழ்பவரும் ஓர் பிடி சாம்பலாகும் நாளிலே
இந்த உண்மையினை அறிபவர்கள் இல்லையே!!
சற்குரு பிரம்மஶ்ரீ நித்தியானந்த
சுவாமிகள் மலரடி சரணம்!!





கூடிவரும் காக்கை எல்லாம் ஒரு கோல்
எடுத்தால் ஓடிவிடும்
துள்ளிவரும் வினைகள் எல்லாம்
உன் சொல்லினிலே மாறிவிடும்..
ஆடிடுவார் ஓடிடுவார் ஆட்டுவிப்பார்
அறியாது இருப்பார்
எண்ணி துணிந்தோர் வாழ்க்கையினை
கண்ணின் மணி போல காத்திடுவார்
கோன் எனவே ஆட்சி செய்யும் குருநாதன்
அருள் கூட வரும்
என்னாளும் கலங்காதே மனமே
குரு நித்தியானந்தரடி தாள் பணி
மனமே



வீடு கொண்டு வாழ்ந்த ஒருவன்
காடு நோக்கி செல்லும் போது
ஓடு கொண்ட பெருமை கூட
இல்லையே??
இதை உணர்ந்து கொண்ட மனிதன்
உலகில் இல்லையே?
வாழும்போது ஆடுவதும் வீழ்ந்தபோது
வாடுவதும் மனிதர்களின் விந்தையான
விந்தையே!!!!
இதை சொல்லி சொல்லி மாளவில்லையே...
ஊர் கூடி அழும்போதும் உள்ளம்
மட்டும் சிரிக்கின்ற கள்ள
வேடதாரிகளின் தொல்லையே
என்றும் கவனமுடன் வாழ்ந்து
விட்டால் இல்லையே..
குரு நித்தியானந்தரடி போற்றி!!!



தாயினைப் போல
காத்திடுவார்..
புத்தனை போல
தேற்றிடுவார்..
சித்தனைப் போல வீற்றிருப்பார் நம்
சிந்தையிலே கோயில் கொண்டிருப்பார்!!



நம்பி வரும் பக்தருக்கு
நாயகனாய் வீற்றிருப்பார்!!
வித்தகமாய்
வினைகளையே
முற்றிலுமாய் ஓட்டிடுவார்..
அன்பு எனும் நூல் கொண்டு
அறிவு தனையே கோர்த்தவராம்..
அண்டம் கடந்தவன் அழகை எல்லாம்
பிண்டத்தில் காண செய்த வராம்!!
சற்குரு பிரம்மஸ்ரீ நித்தியானந்தரடி சரணம்



தூங்கிக் கண்டதொரு
சுகம் அது எனை
தூங்காமல் செய்தது
என்ன?
தோன்றும் மனம் வாக்கு காயம்
மூன்றும் சொல்லிறந்து
போனதென்ன?
ஓடுகின்ற மனமடங்கி
ஓங்காரம் உதித்ததென்ன?



கற்பனையில் காணாத காட்சி
எல்லாம் மன கண்ணிலே
காண வைத்தவரே!!
சந்தனத்தின் குணம்
என்றும் சார்ந்தவரின்
மனம் குளிரும்..
வந்துனையே சேர்ந்து விட்டோம்
விருப்பமோடு அருள் புரிவாய்
குருவே நித்தியானந்தரே போற்றி


எண்ணியதெல்லாம்
எய்திடவே இங்கு
எல்லோருக்கும்
வாய்ப்பதில்லை
பண்ணிய கருமங்கள்
முன்னின்றே நம் பாதையை
காட்டி மறைத்திடுமே..
ஏற்றிய தீப ஒளியினிலே இருள்
எல்லாம் விலகி ஓடிவிடும்
மறைக்கின்ற மேகங்கள்
கலைந்து விடும்
நம்மைக் காக்கின்ற கதிரவன்
ஒளியும் வரும்
நித்தியம் நீ என்று பணிந்து விட்டால்
சந்ததமும் நம்மை வாழ வைப்பார்!!
குரு நித்தியானந்தரடி போற்றி


துன்பத்தைக் கடந்தால்
இன்பம் உண்டு..
கொடுந்துயரத்திலும்
காக்கும் கைகள் உண்டு
நெஞ்சினிலே வலிமை
கொண்டு நீ வாழ்ந்திட்டாலே
நல்வாழ்வும் உண்டு
வாய் பந்தல் போடுகின்ற பூமி இது நீ
வல்லவனாக மாறிவிடு
சொல்லில் சுடரொளி வேண்டுமடா...
எந்த சோதனையும் உனக்கு துச்சமடா!
அஞ்சிடாமல் வாழ்ந்திடவே
ஐயன் அருளினை வேண்டி
நின்றிடுவோம்..
குரு நித்யானந்தரடி
போற்றி!!


தற்போதம் தனை
இழந்து
தண்டனிட்டு
பணிவோர்க்கு
அடைக்கின்ற தாள்
திறந்து அங்கொரு
காட்சி தந்து
அம்மையோடு அப்பனுமாய்
ஆடுகின்ற தெருக்கூத்து
ஐம்புலனோடு கரணம்
அதை ஆடாமல் நிறுத்தி
காணாத கண்ணுக்கு
காட்சியாய் நின்றவரே
பெருமானே
குருவே நித்தியானந்தரே!!!!


கருவில் சுமந்து கையில்
எடுத்து காத்திடும்
அன்னை ஓர் தெய்வமடி!!
அன்பினை நெஞ்சில் வைத்து
அறிவு புகட்டிடும்
அப்பன் ஓர் தெய்வமடி!!
பின்னை ஓர் தெய்வம் ஆரடி
கரை தெரியாமல் தவிப்பதற்கெல்லாம்
கலங்கரை விளக்கமடி!
காற்றினில் கலைகின்ற மேகம் போல
ஈட்டிய கருமங்கள் எல்லாம் அழிக்கின்ற
குருவே தெய்வமடி!!!
சிவம் இதுவென கண்டு உரைத்திட
ஜெகத்தினில் ஆரும் இல்லையடி..
சிவம் வேறில்லை குருவேறில்லை பாதம்
பிடிப்போமடி!
செக்க சிவந்திடும் செவ்வானம்
போலவே நெஞ்சில் உதித்தாரடி!!
குரு நித்தியானந்தரடி!!!


தோன்றின எல்லாம் துவண்டு
விழும் நாள் வரும் முன்னம்
காத்திருந்தவனை யார்
அறிவார் கள்மனமே?
அந்தகன் எனும் ஆகாய பட்சி ஒன்று
ஆட்கொள்ளும் முன்னம்
கொண்ட வடிவத்தால் கொள் பயன் என்ன
கூறிடு கள்மனமே?
கூட்டுவதும் கூடியதை பிரிப்பதும் காட்டுவதும்
என் கண் மறைப்பதும் காலத்தின்
கணக்கெனவே கற்றறிந்தோர் சொன்னதுண்டு
மானத்திலே உயிரை வைத்து ஆடை
கொண்டு மறைப்பது போல்
உள்ளத்திலே உனை வைத்து உறவாடும்
உயிருக்கெல்லாம் உற்ற வழி காட்டடுவாய்
குருவே நித்தியானந்தரே!!


கரு கொண்ட முட்டைக்குள்
உரு கொண்டு வந்தது யார்?
உரு கொண்டு வந்த என்னில் திரு
கொண்டு சேர்த்தது யார்?
கோடி பேர் உலகத்தில் ஓர்
வடிவம் தந்தது யார்?
நின் வடிவம் என் வடிவம்
எவ்வடிவம் சொல்வது யார்??
எள்ளுக்குள் எண்ணனை போல்
எங்கும் நிறைந்தது யார்?
எனக்கு அந்த உண்மையை
அறியாமல் செய்வது யார்?
மாயையோ? மனமோ? நான்
அறியேன் நினைப்பது யார்??
ஐம்பூத பட்டணத்தை அப்படியே
விட்டுவிட்டு அடியேன் நின் பாதம்
அடங்குவதும் எக்காலம்
குருவே நித்தியானந்தரே!!


கண்ணுக்கு விளங்காததை விளங்க
வைக்கும் விளக்கின் ஒளி
அறிவுக்கு விளங்காததை விளங்க
வைக்கும் குருவின் மொழி
கைப்புண்ணுக்கு கண்ணாடி
தேடிடும் விந்தை மனிதரடி!!
அவர்தம் உறவு ஆகாதடி..
முந்தின தவமெல்லாம் முற்றாய்
முளைத்திட வந்தெய்திய
கோலமடி!!
நமை அள்ளி எடுத்து ஓர் மாலையை
போல் அழகுற செய்தாரடி!!
குரு நித்தியானந்தரடி!!!


சிக்கனவே பிடித்தேன் தெய்வ நின் வடிவை
பக்கம் நின்றார்க்கு அருள் செய் பரமனே!
தர்க்கரோடு கூடி தறி கெட்டு போகாமல்
சித்திரை நிலவினவே சிரிக்கின்ற நின் வடிவில்
மது உண்ட தேனி மவுன மலர்
அணையின் மேல் மன்றாடி
நிற்கின்றேன் நின் பாதம்
நான் பிடித்தே
கமலமது மலர்ந்து காற்றினிலே வரும்
மணம் போல் கலங்கமற நின்னருளை
வேண்டுகிறோம் தந்திடுவாய்
குருவே நித்யானந்தரே!!!!!!



காசு இல்லா ஒருவன் கடை தெரு
போகையிலே கூவி அழைப்பார் இல்லையடி
ஈட்டிய பொருள் எல்லாம் எப்போதும் உதவாதடி
அவர் பண்ணிய கருமமடி...
குரு ஆசி இல்லா ஒருவன் வாசிப்
பழகிடினும் ஊர் போய் சேராரடி?
இரு கைகளும் ஓர் பாதமென நின்ற
வடிவமடி அதன் விந்தை அறியாரடி..
ஆர் கொண்டு சேர்ப்பாரடி
இதை அறிந்தால் மோசங்கள் இல்லையடி..
அது மோட்ச வீடாமடி!!
குரு நித்யானந்தரடி!!





குரு இல்லா ஞானமும்.
குரு நெறி நில்லா சீடனும்
குணம் இல்லா பெண் போலவே
குடும்பத்திற்கு ஆகாதடி??
ஓடுகின்ற நீர் போல தினம்
மாறுகின்ற மனங்கள் எலாம்
சேருகின்ற இடம் தேர்ந்து.
நீ சேர்ந்து கொண்டால்
வாழ்வும் உண்டு
வையம் சிறக்கவே வந்திட்ட
வள்ளல் பாதம் பணிவோமடி
குரு நித்யானந்தரடி!!



பித்தாயம் கொண்டு பேசி திரிவோர்
எல்லாம் செத்தார்க்கு சமமடியோ?
ஊசி முனையில் உழன்று
கிடப்போர்க்கு மாசு மருவுமுண்டோ?
மூவரும் தேவரும் காணாத
முதல்வனை காட்டுவது யாரடியோ?
கண்டதை உண்டு என்று சொல்ல
உலகத்தில் யாரடியோ? அவர் குரு
நித்தியானந்தரடியோ!!!!



ஆதியும் அந்தமும் இல்லாத
அரும் பொருள் தன்னை
நிலையில்லா காயமும் மனமும்
கொண்டே நான் அறிவதும்
ஆக கூடுமோ???
பொன்னே!
மணியே!!
போதமே!!!
குருவே நித்தியானந்தரே!!



கண் ஒன்றுதான் பல காட்டும் ஒரு
நாளும் எனைக் காட்டாது
மறைக்கின்ற தன்மை அது
பல கற்றும் உனை மறந்த கல்லாத
சிறு மூடன் நான்
நெல்லுக்கு உமியும் செம்பிற்கு களிம்பும் தந்த
பரம்பொருளின் தன்மை விந்தை யன்றோ
வேண்டுவன கொண்டு வேண்டாமை நீக்கு
இதுவே வாழ்க்கை என்று
சொல்லுக்கு சுவை தருகின்ற பொருள் போல
உள்ளிருந்து ஆட்டுகின்ற நின் விந்தை யார் அறிவார்!!
குருவே
நித்தியானந்தரே!!!



வேதம் கடந்து
நின்றவனை வேதம்
காட்டுமோ.
மனவிகாரம் கடந்து
நின்றவனை காலம்
வாட்டுமோ.
புவனம் கடந்து
நின்றவனை மன
கூட்டினில் காண
சொன்னவரே. குருவே
நித்தியானந்தரே



ஆடுகின்ற பம்பரம் நான்
ஆட்டுகின்ற சூத்திரம் நீ
விண்ணை ஒத்த நின் பெருமை
மண்ணிலே யார் அறிவார்
மண்ணிலே விதைத்த நெல்
மழைக்காக காத்திருக்கும்
குணமில்லா ஏழையிவன்



மங்களமாய் வாழ்த்து
சொல்லி
நின் அருள் கொண்டு காத்திடுவாய்
குருவே நித்தியானந்தரே!!!



மண்டலத்தை ஆளுகின்ற மாமன்னர்
ஆயிரம் பேர்
ஓர் மண்டலம் ஆனதும் மறக்கின்ற
பூமி இது
பொருள் இல்லா வாழ்க்கைக்கும் பொருள்
சொல்லி தந்தவரே
அருள் இல்லா ஏழையர்க்கு ஆரிடுவார்
அருள் தணையே??
நின் வெண் தாடி சிரிப்புக்கும் வேத
மலர் சொல்லுக்கும்
எந்நாளும் பணிகின்றோம்
ஏற்றம் பெற அருள் செய்வாய்
குருவே நித்யானந்தரே!!!


உண்டதெல்லாம்
மலமாகும்
பாடுகின்றான்
பட்டினத்து செட்டி
தேனீ உண்டதெல்லாம்
தேன் தானே
மலமில்லை!!
சிந்திக்கின்ற சிறு பிள்ளை இவன்
சந்தியில் நில்லாது சரசங்கள் பாடுகின்ற
சிந்தை தெளிவில்லாத மாந்தர்
உண்டதெல்லாம் மலமாகும்
தேனீயாய் நீ மாறு!!
பூவாய் மனமாய் உள்ளிருக்கும் தேனாய்
உறைந்திருக்கும் குருவே நித்யானந்தரே


எங்கும் நீ இருந்து எனை
ஆட்டுகின்ற சூத்திரத்தை
ஆரறிவார் அண்ணலே!!
வாட்டுகின்ற
வேதனையில்
வைத்தொரு
சோதனையில்
தேறிடவே அருள் செய்!!
குருவே நித்தியானந்தரே!!!!


உள்ளம் எனும் கோவிலுள்
உன்னையன்றி யாருமில்லை
பள்ளத்துள் பாய்கின்ற
வெள்ளமென என் மனது ஓடாமல்
பண்பு சொல்லி வளர்த்தவரே
குருவே நித்தியானந்தரே